தேவ் கிருபை என்றுமுள்ளது

God's Mercy Endures Forever

Album 26 Song 5

Song 5 தேவ கிருபை என்றுமுள்ளது

Psalm 107 – Four pictures of redemption (lost in desert, darkness, storm, prison). Each ends with “Oh, that men would give thanks to the Lord for His goodness, and for His wonderful works to the children of men!”

தேவ கிருபை என்றுமுள்ளது
கர்த்தரின் கிருபை என்றுமுள்ளது
கர்த்தரைப் போற்றி அவரைத் துதித்து
ஆனந்த சத்தத்தால் ஸ்தோத்தரி

கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும்
பல தேசங்களிலுமிருந்து சேர்க்கப்பட்டவர்களே
நீங்கள் கர்த்தரைத் துதியுங்கள்
ஆனந்த சத்தத்தால் ஸ்தோத்தறியுங்கள்

பசியாகவும் தாகமாகவும் ஆத்துமா தொய்ந்ததாகவும்
அலைந்துத்திரிந்த ஜனங்களே
ஆபத்திலே கர்த்தரை நோக்கி கூப்பிடுங்கள்
இக்கட்டுகளிலிருந்து உங்களை விடுவிப்பார்

தவனமுள்ள ஆத்துமாவை கர்த்தர் திருப்தியாக்கி
பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறார்
தாபரிக்கும் ஊருக்குப் போய்ச் சேரவே
செவ்வையான வழியாலே உன்னை நடத்துவார்

தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாகி
உன்னதரின் ஆலோசனைகளை அசட்டை செய்தவர்களே

ஆபத்திலே கர்த்தரை நோக்கி கூப்பிடுங்கள்
மரண இருளிலிருந்து வெளிப்படப் பண்ணுவார்

கர்த்தர் வெண்கலக் கதவுகளை உடைத்து
இருப்புத் தாழ்பாள்களை முறித்தார்
தேவன் கிருபையால் செய்யும் அதிசயங்களை
எண்ணி கர்த்தரையே துதித்திடுங்கள்

நிர்மூடர் தங்கள் பாதகத்தாலும்
அக்கிரமம் செய்து நோய் கொண்டு ஒடுங்கினர்
உங்கள் ஆபத்திலே கர்த்தரைக் கூப்பிடுங்கள்
தமது வசனத்தை அனுப்பி உங்களை குணமாக்குவார்

கப்பலேறி கடல்யாத்திரை பண்ணுகிற
திரளான தண்ணீர்களிலே தொழில் செய்கிறவர்களே
கர்த்தரின் கிரியைகளை ஆழத்தில் காணுங்கள்
கர்த்தர் கட்டளையிட பெருங்காற்று எழும்பிடுமே

ஆகாயத்தில் ஏறி ஆழங்களில் இறங்கும்
உங்கள் ஆத்துமா கரைந்து போகிறது
உங்கள் ஆபத்திலே கர்த்தரைத் கூப்பிடுங்கள்
கொந்தளிப்பை அமர்த்தி அதின் அலைகளை அடக்குவார்

ஆறுகளை அவாந்தர வெளியாக மாற்றுகிறார்
நீரூற்றுகளை வறண்ட இடமாக்குகிறார்
செழிப்பான தேசத்தை உவர் நிலமாக மாற்றுகிறார்
ஜனங்களின் சபையிலே கர்த்தரை உயர்த்துங்கள்

அவாந்தர வெளியைத் தண்ணீர் தடாகமாக்கினார்
வறண்ட நிலத்தை நீரூற்றாக மாற்றினார்
பசித்தவர்களை அங்கே குடியேற்றுகிறார்
மூப்பர்களின் சங்கத்திலே கர்த்தரைப் போற்றுங்கள்

எளியவனை சிறுமையினின்று எடுத்து
உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கிறார்
அவனின் வம்சங்களை மந்தையைப் போலாக்குவார்
உத்தமர்களே இதைக்கண்டு மகிழ்ந்திருங்கள்

கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும்
பல தேசங்களிலுமிருந்து சேர்க்கப்பட்டவர்களே
நீங்கள் கர்த்தரைத் துதியுங்கள்
ஆனந்த சத்தத்தால் ஸ்தோத்தறியுங்கள்